உ

கடவுள் துணை.

# கந்தரநுபூதி

மூலமும்-உரையும்.

இஃது

தண்ணீர்க்குளம்,

குப்பவினயங்காரால்

பார்வையிடப்பட்டு

புதுவை,

நாராயணசாமி முதலியா

ரவர்களால்

வளவனூர்

முத்துசாமி முதலியா

ரவர்களது

இயற்றமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி வரு—தை மீ

உ

கடவுள் துணை.

# கந்தரநுபூதி

மூலமும் - உரையும்.

## விநாயகர்—காப்பு.

( கலிவிருத்தம். )

நெஞ்சக்கனகல்லுநெகிழ்ந்துருகத் ...*
தஞ்சத்தருள்சண்முகனுக்கியல்சேர் ...*
செஞ்சொற்புனைமாலைசிறந்திடவே ...*
பஞ்சக்கரவானைபதம்பணிவாம்... ...*

(இதன் பொருள்)

மனமாகிய கனத்தகல்லானது நெகிழ்ந்துஉருகஎளிதில் அருள்செய்யும்அறுமுகக்கடவுளுக்குஇலக்கணம்பொருந்திய செவ்விய சொற்களால் அலங்கரிக்கும்பாமாலைசிறப்படைய ஐங்கரக் கடவுளாகிய யானைமுக விநாயகருடைய பாதங்களைப்பணிவாம்-என்றவாறு. *

ஆடும்பரிவேலணிசேவலனைப் ... ...*
பாடும்பணியேபணியாய்வருள்வாய்...*
தேடுங்கயமாமுகனைச்செருவிற்... ...*
சாடுந்தனியானசகோதரனே,........ *

(இ-ள்.) தேடப்பட்ட கயமுகாசூரனை யுத்த களத்தில் வென்றஒப்பற்ற விநாயகருக்குச் சகோதரராகிய முருகக் கடவுளே நடனமாடுங் குதிரையாகிய மயிலெனவும், வேலாயுத மெனவும், சேவற்கொடியெனவும், பாடும்தொழிலே தொழிலாகத்திருவருள்செய்வாய்-எ-று. (க)

உல்லாசநிராகுலபோகவிதச ... ....*
சல்லாபவிநோதனுநீயலவோ... ... *
வெல்லாமறவென்னையிழந்தநலஞ் ...*
சொல்லாய்முருகாசுரர்பூபதியே... *

(இ-ள்) உல்லாசனே-நிராகுலனே-போகனே-சல்லாபனே-விநோதனே-யாவுநீஎல்லவா-எல்லாம்-மறுபடி யென்னையிழந்த நன்மையைச் சொல்லாய் முருகக்கடவுளே- தேவசேனாபதியே-என்றவாறு. (உ)

வானோபுனல்பார்கனன்மாருதமோ....*
ஞானோதயமோநவினான்மறையோ....*
யானோமனமோவெனையாண்டவிடந்...*
தானோபொருளாவதுசண்முகனே....*

(இ-ள்) அறுமுகக் கடவுளே - மெய்ப்பொருளாவது ஆகாயமோ- பூமியோ- அக்கினியோ வாயுவோ- ஞானோதயமோ - சொல்லப்பட்ட- நான்குவேதமோ- நானோ-என்மனமோ- என்னையாண்டவிடந்தானோ-என்றவாறு. (௩)

வளைபட்டகைமாதொடுமக்களெனுந் ... ✻
தளைபட்டழியத்தகுமோதகுமோ... ✻
கிளைபட்டெழுசூருருமுங்கிரியுந் ... ✻
துளைபட்டுருவத்தொடுவேலவனே ... ✻

(இ-ள்) சுற்றத்தாருடன் பொருந்தி யெழுந் துவந்த தாருகாசூரனுடை மார்பும், கிரவுஞ்சமலையும், துளைபட்டுஊடுருவ வேலாயுதத்தைவிட்ட சுப்பிரமணியக்கடவுளே வளையலையணிந்த கைகளையுடைய மனைவிமக்க ளென்னும் பந்தத்திலகப்பட்டு எளியே னழியத்தகுமோ என்றவாறு. (௬)

மகமாயைகளைந்திடவல்லபிரான் ......✻
முகமாறுமொழிந்துமொழிந்திலனே..✻
யகமாடைமடந்தையரென்றயருஞ் ...✻
சகமாயையுணின்றுதயங்குவதே ... ✻

(இ-ள்) மண்-பொன்-பெண்- என்னு மூவகையில்வருந்தும் உலகமாயையிலே நின்று மயங்குவதையொழிந்து மகத்தாகியமாயையை வேரறுத்திடவல்ல கடவுளாகிய சுப்பிரமணியரு டைய ஆறுமுகங்களைத் துதிசெய்திலன்-எ-று

திணியானமனோசிலைமீதுனதா ... ...✻
ளணியாரரவிந்தமரும்புமதோ.. ....✻
பணியாவெனவள்ளிபதம்பணியுந் ... ✻
றணியாவதிமோகதயாபரனே .. ... ✻

(இ-ள்) குற்றேவற் றொழிலைக் கட்டளையிடுவா
யென வள்ளிநாயகி பதங்களை வணங்குந் தணி
காசலத்தில் விரும்புற்றுவாழுந் தயாபரனேப
லம்பொருந்திய வென் மனமென்னுங் கல்லி
ன்மேல் உம்முடைய திருவடிகளாகிய அழகிய
தாமரைகள் மலருமோ—என்றவாறு. (௬)

கெடுவாய்மனனேகதிகேள்கரவா......*
திடுவாய்வடிவேலிறைதாணினைவாய்... *
சுடுவாய்நெடுவேதனைதூள்படவே ... *
விடுவாய்விடுவாய்வினையாவையுமே... *

(இ-ள்.) மனமே நீ கெட்டுப்போவாய் நற்கதி
யொன்று சொல்வேன் கேட்பாயாக - பொரு
ளையொளியாது கொடுப்பாயாக வடிவேலே
ந்திய கடவுளுடைய தாள்களை நினைப்பாயாக-
நெடியவேதனை தூள்படும்படி சுடுவாயாக தீ
வினையாவையும் விட்டுவிடுவாயாக—எ-று. (எ)

அமரும்பதிகேளகமாமெனுமிப் ... *
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசியவா..
குமரன்கிரிராசகுமாரிமகன் ......... *
சமரம்பொருதானவநாசகனே... ...*

(இ-ள்) அகமெனும் அஞ்ஞானங்கெட மெய்ஞ்ஞானப்பொருளைப் போதித்தவனே-குமரனே-பர்வதராசபுத்திரிக்குமகனே-யுத்தஞ்செய்யும் அசுரர்குலநாசனே யானமரும்பதி உன்னுள் வினவியருள்வாயாக—எ-று. (௮)

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப்.. *
பட்டூசல்படும்பரிசென்றொழிவேன்...*
நட்டூடறவேல்சைலத்தெறியு... ... *
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே... ... *

(இ-ள்.) கிரவுஞ்சமலையைத் தட்டூ டுருவும்படி வேலைவிட்டெறியும் நிஷ்டூரனே-நிராகுலனே-பயமற்றவனே-வாசனைபொருந்திய கூந்தலையுடையமாதர்கள் மயக்கவலையிற்பட்டு ஊசல்போலாடுந் தன்மையை யெப்பொழுதொழிவேன்—எ-று. (௯)

கார்மாமிசைக்காலன்வரிற்கலபத்......*
தேர்மாமிசைவந்தெதிரப்படுவாய் ...*
தார்மாபவலாரிதலாரியெனுஞ்... ...*
சூர்மாமடியத்தொடும்வேலவனே ... *

(இ-ள்) கடப்பமாலையுடைய மார்பனே தே

வேந்திர னுலகிற்குப் பகையாகிய் சூரபதும ன் மாமரமாகிமடிய வேலைவிட்ட கடவுளே க றுத்த எருமைக்கடாவின்மேல் எமன்வந்தால் தோகைமயிலாகிய தேர்மேல்வந்து தரிசனைத் தருவாயாக—எ-று. (௰)

கூகாவெனவென்கிளைகூடியழப்... ...*
போகாவகைமெய்ப்பொருள்பேசியவா.
நாகாசலவேலவநாலுகவித் .. ... ...*
தியாகாசுரலோகசிகாமணியே ... *

(இ-ள்) கூகாவென்றசத்தத்துடன் என் சுற்றத் தார்கூடி யழாதவகையாய் எனக்குமெய்ஞ்ஞா னப்பொருளைப் போதித்தவனே - மலைகளையு டையவனே-வேலாயுதனே-நாற்கவிக்குந்தியா கங்கொடுப்பவனே-தேவலோக சிகாமணியே- என்னைக்காப்பாயாக—எ-று. (௰க)

செம்மான்மகளைத்திருடுந்திருடன் ... *
பெம்மான்முருகன்பிறவானிறவான் ... *
சும்மாவிருசொல்லறவென்றலுமே.. *
யம்மாபொருளொன்றுமறிந்திலனே..*

(இ-ள்.) செவ்வியமான்மகளாகிய வள்ளிநாயகி

னையத்திருடப்பட்ட திருடன் பெருமையுடை யவன் முருகன் பிறப்பிறப்பற்றவன் மௌனமாக சும்மாவிருவென்றளவில் யாதொருபொருளையுமறிந்திலன் இஃதாச்சரியம்-எ-று.(௰௨)

முருகன்றனிவேன்முனிநங்குருவென். *
றருள்கொண்டறியாரறியுந்தரமோ... *
வுருவன்றருவன்றுளதன்றிலதன் ... *
றிருளன்றொளியன்றெனநின்றதுவே *

(இ-ள்) முருகக்கடவுள் ஒப்பற்றவேலையுடையமுனிவன் நம்முடைய குருவென்று அவருடையதிருவருளைக்கொண்டு அறியாதவர்கள் அவரையறிவார்களோ அக்கடவுள் உருவமல்ல அருவமல்ல உள்ளதல்ல இல்லதல்ல இருளல்ல ஒளியல்ல என்றுநின்றது—எ-று. (௰௩)

கைவாய்கதிர்வேன்முருகன்கழல்பெற் *
றுய்வாய்மனனேயொழிவாயொழிவாய்.
மெய்வாய்விழிநாசியொடுஞ்செவியா.. *
மைவாய்வழிசெல்லுமவாவினையே ... *

(இ-ள்) மனமே ஒழுங்காகக்கிரணம் பொருந்திய வேலையுடைய முருகக்கடவுளின் திருவடி

களைப்பெற்றுமெய்வாய்கண் மூக்குசெவியெ
ன்னும் ஐம்பொறிவிடயமாகிய வைம்புலன்க
ளையும் ஒழித்துப்பிழைப்பாயாக-எ-று.(௧௪)

முருகன்குமரன்குகனென்றுமொழிந் *
துருகுஞ்செயறந் துணர்வென்றருள்வா
ய்,பொருபுங்கவரும்புவியும்பரவுங் ... *
குருபுங்கவவெண்குணபஞ்சரனே ... *

(இ-ள்) தேவர்களும் பூமியும் வணங்குங் குரு
சாமியே எண்குண முடையவனே முருகன்கு
மரன் குகன் என்று சொல்லி உள்ள முருகுஞ்
செய்கையைத்தந்து அறிவையென்று திருவரு
ள்செய்வாய்—எ-று. (௧௫)

பேராசையெனும்பிணியிற்பிணிபட்... *
டோராவினையேனுழலத்தகுமோ ... *
வீராமுதுசூர்படவேலெறியுஞ்... ... *
சூராசுரலோகதுரந்தரனே ... ... *

(இ-ள்) வீரனே பழமையாகிய சூரபதுமன்
பிளவுபட வேலாயுதமெறிந்த சூரனே தேவ
லோக துரந்தரனே பெரிய ஆசையென்னும்
நோயில் கட்டுப்பட்டு யாதொன்று மறியாத

வினையினேன் உழலத்தகுமோ—எ-று. (௰௬)

யாமோதியகல்வியுமெம்மறிவுந் ... *
தாமேபெறவேலவர்தந்ததனாற்... ... *
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்.
நாமேநடவீர்நடவீரினியே... ... ...*

(இ-ள்) யாமோதின கல்வியும் எம்முடைய அ
றிவும் தாம் பெற்றுக்கொள்ள வேலாயுதக்கட
வுள் கொடுத்ததனாலே பூமியின் மேலே மயக்
கநீங்கத்தருமத்தை யுண்மையாகச் செய்பவல்
லவர்களே இனி முருகக்கடவுளை நாவினாலே
பாடி நடவுங்கள் நடவுங்கள்—எ-று. (௰௭)

உதியாமரியாவுணராமறவா ... ... *
விதிமாலறியாவிமலன்புதல்வா... ... *
வதிகாவனகாவபயாவமரா ... ... ...*
வதிகாவலசூரபயங்கரனே... ... ... *

(இ-ள்) பிறந்து இறந்து அறிந்து மறந்து வா
ழும் பிரமன் விட்டுணு அறியப்படாத பரம
சிவன் மைந்தனே மேலானவனே அங்கமில்லாத
வனே பயமில்லாதவனே அமராபதித் தலைவ
னே சூரர்களுக்குப்பயங்கரந் தருபவனே வத்

தனம்வந்தனம்—எ-று. (௰௮)

வடிவுத்தனமும்மனமுங்குணமும் ... *
குடியுங்குலமுங்குடிபோகியவா ... *
வடியந்தமிலாவயில்வேலரசே ... ...*
மிடியென்றொருபாவிவெளிப்படினே.

(இ-ள்) அடியு முடியுமில்லாத கூர்மைபொருந்திய வேலாயுதக்கடவுளே வருமையென்றொருபாவி வெளிப்பட்டால் வடிவமும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் தன்னை விட்டுக் கூடிப்போய்விடும்—எ-று. (௰௯)

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியே.. *
னுரிதாவுபதேசமுணர்த்தியவா... ...*
விரிதாரணவிக்ரமவேளிமையோர் ... *
புரிதாரகநாகபுரந்தரனே... ... ... *

(இ-ள்) அருமையாகிய உண்மைப்பொருளுக்குஅடியேனுக்கு உரித்தான ஞானோபதேசம் உணர்த்தியவனேவிரிந்ததாரணமுடையவனே பராக்கிரமனே சுப்பிரமணியனே அமராவதிக்குத்தாரகனே தேவலோகத்தைக்காப்பவனே தோத்திரம் தோத்திரம்—எ-று. (௨௰)

கருதாமறவாநெறிகாணவெனக் ... ... *
கிருதாள்வனசந்தரவென்றிசைவாய் ... *
வரதாமுருகாமயில்வாகனனே ... ... *
விரதாசுரசூரவிபாடணனே ... ... ... *

(இ-ள்) வரதனே முருகனே மயில்வாகனனே விரதனே சூரனே சூரசங்காரனே உம்மை நினைத்து எப்பொழுது மறவாது நல்வழியைக் காண எனக்கு உம்முடைய உபயபாத தாமரைகளைஎன்றருள்செய்வாய்—என்றவாறு. (௨௧)

காளைக்குமரேசனெனக்கருதித்... ... *
தாளைப்பணியத்தவமெய்தியவா... ... *
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும் ... *
வேளைச்சுரபூபதிமேருவையே ... .. *

(இ-ள்) கூந்தற்பனையின் பாளைக்கொப்பாகிய கூந்தலையுடைய வள்ளிநாயகி திருவடிகளை வணங்கும் சுப்பிரமணியக்கடவுளைத்தேவசேனாதிபதி மேருவைக்காளையாகிய குமரேசக்கடவுளென்று நினைத்துத்திருவடிகளைவணங்க எனக்குச்செய்தவங்கள்பொருந்தினவாம், எ-று (௨௨)

அடியைக்குறியாதறியாமையினான் ... *
முடியைக்கெடவோ முறையோ முறை.

யோ,வடிவிக்ரமவேன்மகிபா குறமின் *
கொடியைப்புணருங்குணபூதரனே .. *

(இ-ள்) வடித்த வேலையுடைய மகிபனே குறமகளாகிய வள்ளிநாயகியைப் புணரும் குணக்குன்றனே உம்முடைய திருவடியைக் குறியாது நானறியாமையினாலே முடியக்கெடுதல் முடியாது-என்றவாறு. (௨௫)

கூர்வேல்விழி மங்கையர்கொங்கையிலே.
சேர்வேனருள்சேரவுமெண்ணு மதோ *
சூர்வேரொடுகுன்றுதுளைத்தநெடும் .. *
போர்வேலபுரந்தரபூபதியே ... ... *

(இ-ள்) தாருகாசூரனையும் கிரவுஞ்சமலையையும் வேரோடு துளைத்த நெடிய போர்வேலையுடையவனே தேவேந்திரலோகாதிபதியே கூர்மையாகியவேல்போலுங்கண்களையுடைய பெண்கள் கொங்கையிடத்துச் சேர்பவனாகிய நான் உம்முடைய அருள்பெற வெண்ணுவீரோ

மெய்யேயெனவெவ்வினைவாழ்வையுகந்.
தையோவடியேனலையத்தகுமோ .. .. *
கையோவயிலோகழலோமுழுதுஞ் ..*

செய்யோய்மயிலேறியசேவகனே... *

(இ-ள்) பன்னிருகையும் வேலாயுதமும் இருதிருவடியும் முற்றும் அழகு பொருந்தியவனே மயில்வாகனமேறிய சேவகனே வெவ்வினை வாழ்வை உண்மையென மகிழ்ந்து ஐயோ அடியேனாகிய நான் அலையத்தகுமோ-எ-று. (௨௩)

ஆதாரமிலேன்அருளைப்பெறவே ... *
நீதானொருசற்றுநினைந்திலையே ... ...*
வேதாகமஞானவிநோதமனோ... ... *
தீதாசுரலோகசிகாமணியே... ... ...*

(இ-ள்) வேதாகமனே ஞானவிநோதனே மனோதீதனே தேவலோக சிகாமணியே ஆகாரமிலாதவனாகிய நான் உமது திருவருளைப்பெற நீர்சற்றாவது நினைந்ததில்லை-என்றவாறு. (௨௪)

மின்னேநிகர்வாழ்வைவிரும்பியயா..*
னென்னேவிதியின்பயனிங்கிதுவோ.. *
பொன்னேமணியேபொருளேயருளே
மன்னேமயிலேறியவானவனே... ...*

(இ-ள்) பொன்னே நவமணியே தேடரும்

பொருளே திருவருளே நிலைபேறுடையவனே மயிலேறிய தேவனே மின்னலை நிகர்த்த வாழ்வை இச்சித்த நான் வருந்துதல் என்ன இதுவிதியின்பயனோ-என்றவாறு. (௨எ)

ஆறுவமுதேயயில்வேலரசே ........*
ஞானுகரனேநவிகுலத்தகுமோ.... ...*
யானுகியவென்னைவிழுங்கிவெறுந் ... *
தானுய்நிலைநின்றதுதற்பரமே... ...*

(இ-ள்) கெடாதவயிர்தமே கூர்மை பொருந்திய வேலேந்திய அரசனே ஞானமுடையவனேயான் வேறொன்றைத் துதிக்கத் தகுமோ என்னைவிழுங்கி வெட்டவெளியாய்த்தானுய் நிலைநின்றது தற்பரம்-என்றவாறு. (௨அ)

இல்லேயெனுமாயையிலிட்டனை நீ ... *
பொல்லேனறியாமைபொறுத்திலையே.
மல்லேபுரிபன்னிருவாகுவிலென் ... *
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே .. *

(இ-ள்) மல்யுத்தஞ்செய்யும் பன்னிரு தோள்களில் என்புன்சொல்லை நன்சொல்லாகத்தரிக்கும் சுடர்பொருந்திய வேலாயுதத்தை யுடையவ

னே, இல்லறமென்னும் மாயையில் என்னை வை த்தாய் நீ அற்பனாகிய என் அறியாமையை நீ பொறுத்ததில்லை—என்றவாறு. (௨௯)

செவ்வானுருவிற்றிகழ்வேலவனன் ... *
றொவ்வாதவெனவுணர்வித்ததுதா ... *
னவ்வாரறிவாரறிகின்றதலா .. ... ... *
லெவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே. *

(இ-ள்) செவ்வானம்போலும் திருவுருவில் பிரகாசிக்கும் வேலாயுதக்கடவுள் அக்காலத்தில் பிரமனுக்குச் சிருட்டித்தொழில் அவ்வாதவென்று தன்பிதாவின் செவியில் உபதேசித்தபிரணவமானது சிவன்தானவ்வா றறிவார் அவர் அறிகின்றதல்லாமல் அப்பிரணவத்தையெவ்வாறு ஒருவருக்குப் போதிப்பது—எ-று. (௩௰)

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே.. *
வீழ்வாயெனவென்னைவிதித்தனையே .. *
தாழ்வானவைசெய்தனதாமுளவோ... *
வாழ்வாயினிநீமயில்வாகனனே ... ... *

(இ-ள்) மயில்வாகனக் கடவுளே பாழாகிய வாழ்வென்றும் இந்தப்படு மாயையிலே விழக்க

டவாயென்று என்னை விதித்துவிட்டாயே நா
ன்தாழ்வானவைகளைச் செய்தேனோ அக்குற்ற
ங்களுளவோ இனிநீ வாழ்வாயாக—எ-று (௫௪)

கலையெபதறிக்கதறித்தலையூ ... ... *
டலையேபடு மாறதுவாய்விடவோ ... *
கொலையோபுரிவேடர்குலப்பிடிதோய்..
மலையேமலைகூறிடுவாகையனே... ...*

(இ-ள்.)மான்பதறிக்கதறிதலையூடுருவ அம்பெய்
து அதுபட்டுவிழும்படி வாய்விட்டலறக்கொ
லைத்தொழில்செய்யும் வேடர்குலப் பெண்ணை
ப் புணரும் மலையைக் கூறிட்ட வெற்றியை யு
டையவனே (தோத்திரம்)--எ-று (௫௫)

சிந்தாகுலவில்லொடுசெல்வமெனும்..*
விந்தாடவியென்று விடப்பெறுவேன்*
மந்தாகினிதந்தவரோதயனே ... ... *
கந்தாமுருகாகருணாகரனே ... ... *

(இ-ள்) கங்கைதந்தபுத்திரனே கந்தனே முரு
கனே கருணாகரனே வியாகுலமாகிய இல்லறத்
தோடு செல்வமென்னும் வேடிக்கைக்காட்டை
எப்பொழுதுவிடப்பெறுவேன்—எ-று.(௫௬)

சிங்காரமடந்தையர்தீநெறிபோய் ... *
மங்காமலெனக்குவரந்தருள்வாய் ... *
சங்க்ராமசிகாவலசண்முகனே ... *
கங்காநதிபாலகிர்பாகரனே ... ... *

(இ-ள்) போர்வீரனே அரசனே அறுமுகனே கங்கா புத்திரனே கிருபாகரனே சிங்காரப் பெண்களுடைய தீயவழியிற்போய் கெடாதிருக்க எனக்கு வரந்தருவாயாக—எ-று. (௧௪)

விதிகாணுமுடம்பைவிடாவினையேன் ... *
கதிகாணமலர்க்கழலென்றருள்வாய் ... *
மதிவாணுதல்வள்ளியையல்லதுபின் .. *
றுதியாவிரதாசுரபூபதியே ... ... *

(இ-ள்) இளம்பிறைபோலு நெற்றியை யுடைய வள்ளிநாயகியை யல்லது வேறொருவரைத் துதியாத விரதனே தேவர் பூபதியே பிரமன் சிருட்டித்த உடலை விட்டுவிடா வினையுனேன் நற்கதியுடைய மலர்போலும் திருவடியையெப்பொழுதருள்வாயாக— எ-று. (௧௫)

நாதாகுமராநமவென்றரனு ... ... *
ரோதாயெனவோதியதெப்பொருடான்.

வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப் ... *
பாதாகுறமின்பதசேகரனே... .. ... *

(இ-ள்.) பிரமன் முதல் தேவர்கள் சிரசிற் சூடு மலர்போலு மடியை யுடையவனே வள்ளிநாயகி பதங்களைத் தரிக்கும் முடியை யுடையவனே நாதனே குமரனே நமவென்று பரமசிவனார் ஓதுவாயென்றுசொல்ல நீ ஓதிய பிரணவப்பொருள் எப்பொருள்—எ-று. (௧௬)

கிரிவாய்விடுவிக்ரமவேலிறையோர் ... *
பரிவாரமெனும்பதமேவலையே ... ... *
புரிவாய்மனனேபொறையாமறிவா... *
லரிவாயடியோடுமகந்தையையே ... *

(இ-ள்) மனமே கிரவுஞ்ச மலையாய்விட வேல் விட்ட சுப்பிர மணியக் கடவுள் தேவசேனைகளோடுவந்த திருவடிகளைப் பற்றவில்லையே அவர் திருவடிக்குத் தொண்டுசெய்வாயாக பொறுமையாகிய அறிவால் அகந்தையை யடியோடும் அறிவாயாக—எ-று. (௧௭)

ஆதாளியையொன்றறியேனையறத் ... *
தீதாளியையாண்டதுசெப்புமதோ... *

கூதாளகிராதகுலிக்கிறைவா ... ... *
வேதாளகணம்புகழ்வேலவனே... ..*

(இ-ள்) கூதாளச்செடியைச் சிரசிலேதரிக்கும் வேடர்களுடைய மகளாகிய வள்ளிக்கு நாயகனே வேதாளக் கூட்டம் புகழும் வேலாயுதக்கடவுளே அறிவில்லாதவனை ஒன்றும் அறியாதவனை முற்றும் குற்றவாளியை ஆட்கொண்டதைச்சொல்வாயாக—-எ-று. (௧௮)

மாவேழ்சனனங்கெடமாயைவிடா... *
மூவேடனையென்றுமுடிந்திடுமோ ..*
கோவேகுறமின்கொடிதோள்புணருந்*
தேவேசிவசங்கரதேசிகனே ... *

(இ-ள்) அரசனே குறமகளாகிய வள்ளிநாயகிதோளைப்புணருந் தேவனேசிவசங்கரனேதேசிகனே மகத்தாகிய எழுபிறப்பும்கெட மாயைவிடாத மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னும் மூன்றாசையும் எப்பொழுது முடிவுபெறுமோ—எ-று. (௧௯)

வினைபோடவிடுங்கதிர் வேன்மறவேன்*
மனையோடுதியங்கிமயங்கிடவோ ... *

சுனையோடருவித்துறையோடுபசுந் ... *
தினையோடிதணோடுதிரிந்தவனே .... *

(இ-ள்) சுனையோடும்கான்யாற்றுத்துறையோடும் பசுமையாகிய தினையோடும் தினைப்பறங் காக்கும் பரணோடும் மனைவியோடு தியங்கிமயங்கித்திரிந்த கடவுளே என் தீவினையோட விடப்பட்ட கதிர்வேலை மறவேன்—எ-று.(௬௰)

சாகாதெனையேசரணங்களிலே ... ...*
காகாநமனார்கலகஞ்செயுநாள் ... *
வாகாமுருகாமயில்வாகனனே ... *
யோகாசிவஞானோபதேசிகனே ... *

(இ-ள்) வெற்றியுடையவனே முருகனே மயில்வாகனனே யோகனே சிவஞானோப தேசிகனே யமன் கலகஞ்செய்ய வருநாளையில் சாகாமல் என்னை உம்முடைய பாதங்களிலே வைத்துக்காப்பாயாக—எ-று. (௬௧)

குறியைக்குறியாதுகுறித்தறியு ... *
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலுஞ் *
செறிவற்றுலகோடுரைசிந்தையுமற் *
றறிவற்றறியாமையுமற்றதுவே ... *

(இ-ள்) மெய்ப்பொருட் குறியைக் குறியாது குறித்தறியப்பட்ட நெறியை ஒப்பற்ற வேலை நிகழ்த்திய வளவில் மாயையற்று உலகற்றுச் சொல்லற்றுச் சிந்தையுமற்று அறிவற்று அறியாமையுமற்று நின்ற வஸ்து—எ-று. (சஉ)

தூசாமணியுந் துகிலும்புனைவா ... *
ணேசாமுருகாநினதன்பருளா ... *
லாசாநிகளந் துகளாயினபின் ... *
பேசாவனுபூதிபிறந்ததுவே ... *

(இ-ள்) சாணையிற்கொடாதமணிகளையும்வஸ்தி ரத்தையுந் தரிக்கப்பட்ட குறவள்ளிக்கு நேசனே முருகனே உனதன்பாகிய திருவருளினாலே மாயாபந்தங்களற்றன அனுபூதிபிறந்தது என்றவாறு. (சரு)

சாடுந்தனிவேன்முருகன்சரணஞ் ... *
சூடும்படிதந்ததுசொல்லுமதோ ... *
வீடுஞ்சுரர்மாமுடிவேதமும்வெங் ... *
காடும்புனமுங்கமழுங்கழலே ... (சச)

கரவாகியகல்வியுளார்கடைசென் ... *
றிரவாவகைமெய்ப்பொருளீகுவையோ.

சூரவாகுமராகுலிசாயுதனுஞ் ... ... *
சரவாசிவயோகதயாபரனே ... .(௬௫)

எந்தாயுமெனக்கருடந்தையுநீ... ... *
சிந்தாகுலமானவைதீர்த்தெனையாள் ...*
கந்தாகதிர்வேலவனேயுமையாண்... ...*
மைந்தாகுமராமறைநாயகனே ...(௬௬)

ஆறாறையுநீத்ததன்மேனிலையே ... ...*
பேறாவடியேன்பெறுமாறுளதோ ...*
சீறாவருசூர்சிதைவித்திமையோர்......*
கூறாவுலகங்குளிர்வித்தவனே ... (௬௭)

அறிவொன்றறநின்றறிவாரறிவிற் ... ...*
பிறிவொன்றறநின்றபிரானலையோ .... *
செறிவொன்றறவந்திருளேசிதைய ...*
வெறிவொன்றவரோடுறும்வேலவனே.()

தன்னந்தனிநின்றதுதானறிய ... ... *
இன்னம்மொருவர்க்கிசைவிப்பதுவோ..
மின்னுங்கதிர்வேல்விகிர்தாநினைவார் .*
கின்னங்களையுங்கிருபைசூழ்சுடரே (௬௯)

மதிகெட்டறவாடிமயங்கியறக் ... ... *
கதிகெட்டவமேகெடவோகடவே.... *

நதிபத்திரஞானசுகாதிபவத் ... ... ...*
திதிபுத்திரர்வீறடுசேவகனே...... (ருய)

உருவாயருவாயுளதாயிலதாய் ... ... ...*
மருவாய்மலராய்மணியாயொளியாய்க்.*
கருவாயுயிராய்க்கதியாய்விதியாய்க் ... *
குருவாய்வருவாயருள்வாய்குகனே ...*

கந்தரனுபூதி

மூலமும்- உரையும்.

முற்றிற்று.